ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ் ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-2, இதழ்-1, சனவரி 2019

# சங்க இலக்கியங்களில் சிட்டுக்குருவியும் சிட்டுக்குருவியின் இன்றைய நிலையும்

**எஸ். பாலாஜி**

உதவிப்பேராசிரியர், **உயிரித்தொழில்நுட்பவியல்** துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி - 626124, தமிழ்நாடு, இந்தியா

மனிதர்களோடு நெருங்கிய உறவுடைய பறவைகளுள் சிட்டுக்குருவியும் ஒன்று. மனிதன் வசிக்கும் அனைத்து இடங்களிலும் ஓர் அங்கமாக இருந்த சிட்டுக்குருவிகள் இன்று அருகி வருகின்றன. இதற்கான காரணத்தை இக்கட்டுரை பதிவு செய்கின்றது.

## இலக்கியப் பதிவில் சிட்டுக்குருவிகள்



சங்க இலக்கியங்களில் குருவிகள் “குரீஇ“ எனச் சுட்டப் பெற்றுள்ளன. ஆண் குருவியும் பெண் குருவியும் தம் பிள்ளைகளோடு மனையகத்தே உறைந்து வாழ்ந்ததையும் ஆண் குருவி தன் பெடையினை விடுத்துப் பிறிதொரு பேடையுடன் புணர்ந்து வந்த பொழுது, பெண் குருவி(பெடை) தன் பிள்ளைகளோடு ஆண் குருவியைக் கூட்டினுள் புகாதவாறு தடுத்ததையும் குறித்த பதிவு சங்கப் பாடலில் பதிவு பெற்றுள்ளதை,

*‘உள்ளிறைக் குரீஇக் காரணல் சேவல்*
*பிறபுலத் துணையோடு உறைபுலத் தல்கி*
*வந்ததன் செவ்வி நோக்கிப் பேடை*
*நெறிகிளர் ஈங்கைப் பூவின் அன்ன*
*சிறுபல் பிள்ளைகயொடு குடம்பை கடிதலில்”* (நற்றிணை 181)

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன. சிட்டுக்குருவிகள் மனைகளில் குடும்பமாக உறைந்து வாழ்ந்ததை அறிய இப்பாடல் துணைநிற்கின்றது.

ஆண்குருவி சூலுற்ற தன் பெண்குருவி முட்டையை இடுவதற்காகக் கரும்பின் மென்மையான வெண்மையான பூக்களைத் தேர்ந்தெடுத்து ஈன்இல் (முட்டை ஈனும் இடம்) அமைத்த செய்தியை,

‘..........................................

*உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்*
*சூன்முதிர் பேடைக்கு ஈன்இல் இழைஇயர்*
*தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்*
*நாறா வெண்பூக் கொழுதும்”*
(குறுந்தொகை 85)

என்ற குறுந்தொகைப் பதிவிலிருந்து அறியமுடிகின்றது.



(கி.பி.1920இல் இலண்டன் பூங்காவில் எடுக்கப்பட்ட படம்)

## மேலைநாடுகளில் சிட்டுக்குருவிகள்

கடந்த சில ஆண்டுகளாக சிட்டுக்குருவியின் எண்ணிக்கை மிக வேகமாகக் குறைந்து வருவதாக லண்டன், நெதர்லேண்ட், ஐரோப்பா, ஜெர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஜபெயின், இந்தியா போன்ற நாடுகளில் நடந்த ஆராய்ச்சிகளின் மூலம் அறியமுடிகின்றது (Vincent, K.E., Investigating the causes of the decline of the Urban House Sparrow Passer domesticus population, 2007)

இங்கிலாந்தில் செயல்பட்டு வரும் '(Royal Society for Protection of Birds (RSPB))" ஆராய்ச்சியின் முடிவுகள் சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை 60 சதவீதம் குறைந்து விட்டதைத் தெளிவுறுத்துகின்றன. இதற்கு கி.பி.1920 ஆம் ஆண்டு லண்டன் பூங்காவில் எடுக்கப்பட்ட படம் சான்றாகும். இன்று இத்தகைய சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையைக் காண முடியவில்லை என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. (Leet, J.D. and Smith, J.D.S., The status of the Urban House Sparrow Passer domesticus in North Western Europe: A review, 2007)

### சிட்டுக்குருவிகள் குறைவதற்கான காரணம்

அதிக எண்ணிக்கையிலான சிட்டுக்குருவிகள் இருந்த காரணத்தினால் கி.பி.1960ஆம் ஆண்டு மதுரை மாநகரின் சிம்மக்கல் பகுதியில் சிட்டுக்குருவி காளியம்மன் கோயில் கட்டப்பட்டுள்ளது. ஆனால் இன்றோ இக்குருவிகள் இவ்விடத்தில் தோன்றுவது மிக அரிதாக இருக்கின்றது என்று ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகின்றனர்.



சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக பெங்களூரு, மும்பை, ஹைதராபாத், கேரளா, குஜராத், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் நடைபெற்ற ஆராய்ச்சியின் மூலம் தெரிய வந்துள்ளது. சிட்டுக்குருவிகள் குறைந்து வருவதற்கு மனிதனின் வீடு கட்டும் தன்மையும் மிக முக்கியமான காரணியாக உள்ளது. முன்பு ஒரு வீட்டில் முன்புற இடம் (Varandah), காற்றோட்டமான இடம்(Ventilator), திண்ணைகள் இருந்தன. இவ்விடங்களில் சிட்டுக்குருவி தனது கூட்டினைக் கட்டுவதற்கு ஏதுவாக இருந்தது. பழங்காலத்தில் இருந்த கட்டடக்கலை காலப்போக்கில் மாறிச் சிட்டுக்குருவிகள் கூடு கட்டுவதற்கு இடம் இல்லாது போயிற்று.(Balaji, Artificial nest for House Sparrow – An apt method to save the dwindling species in an urban environment, 2014)



நகர்ப்புறங்களில் சிட்டுக்குருவிகள் தங்கள் குஞ்சுகளுக்கு உணவாக ஊட்ட வேண்டிய புழுக்கள் மிகக் குறைய ஆரம்பித்தன. இதனால் சிட்டுக்குருவியின் எண்ணிக்கையும் குறைந்து விட்டன. இதைக் கருத்தில் கொண்டே நம் நாட்டின் தலைநகரான தில்லியில் சிட்டுக்குருவியை மாநிலப் பறவையாக அறிவித்தார் முன்னாள் தில்லி முதலமைச்சர் ஷீலா தீட்சித்.

நம் நாட்டில் இதுவரை சிட்டுக்குருவி நிலையைப் பற்றிய ஆராய்ச்சி கர்நாடகம், ஜம்மு காஷ்மீர், மேற்கு வங்காளம், ஆந்திரா, புதுதில்லி, தமிழ்நாடு போன்ற ஒரு சில மாநிலங்களில் மட்டுமே செய்யப் பெற்றுள்ளது.

நம் உலகில் ஒரு காலத்தில் விளைநிலத்தில் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படவில்லை. மருந்தில்லா நிலத்திலிருந்து குருவிகள் தமது குஞ்சுகளுக்குத் தேவையான பூச்சிகளை உணவாகக் கொடுத்தன. ஆனால் இன்றைய நிலையில் இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த மருந்து பயன்படுத்துவதால் குருவிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

### நிறைவுரை

சிட்டுக்குருவிகள் நம் வீட்டில் தங்கும் வகையில் செயற்கைக் கூடுகளை அட்டைப் பெட்டியில் உருவாக்கி அதில் வைக்கோலை அடைத்து நம் வீட்டில் உள்ள மாடியின் முன்புற இடத்திலோ அல்லது மரத்திலோ கட்டினால் அழிவின் விளிம்பில் இருக்கும் இவ்வினத்தை நாம் காப்பாற்றலாம்.

ISSN NO.2581-5938
மலர்-2, இதழ்-1, சனவரி 2019

# HOUSE SPARROW IN SANGAM LITERATURE

**S. Balaji**

House Sparrow has been an integral part of Tamil culture in South India dating back to the sangam age (1st century BC to 2nd Century AD). Evidences of House sparrow are available in sangam poems in which these birds are referred to as 'kuruve' in tamil.

Among the various species of birds House sparrow is one of the familiar species that has followed man everywhere and it is inseparable from human habitations. Urbanization appears to be the leading problem in the reduction of the available habitat of House sparrow.